பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடு மாசி ீ 01 உ புதன்கிழமை (13-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 78

# வடக்கிற்கு மின்சாரம் வழங்க கூட்டுப்படை அனுமதி மறுப்பு

## சபையின் முயற்சி பலிக்கவில்லை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 13

வடபகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்க மின்சாரசபை எடுத்த முயற்சி பலிக்கவில்லை.

மின்சார விநியோகத்திற்கு அனுமதி வழங்க, கூட்டுப்படைத் தலைமையகம் அடியோடு மறுத்துவிட்டது.

மின்சாரசபை வட்டாரங்களிலிருந்து இத்தகவல் தெரிய வந்தது.

வடபகுதிக்கு மீண்டும் மின்சார விநியோகத்தை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கொழும்பு சென்றிருந்தனர் என்பது தெரிந்ததே.

மின் விநியோகத்தை சீராக்
[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் மும்முனைத் தாக்கு!

### கடும் சண்டை தொடர்கிறது

யாழ்ப்பாணம், பெப். 13

முல்லைத்தீவுப் பகுதியில் தரை, கடல், ஆகாய மார்க்கமாக — மும்முனைத் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

நேற்றுக் காலை 7-45 மணியளவு முல்லை எதாகல் தில்வுய மிலிருந்து எல்லா வழிகளாலும் முன்னேற முயன்ற படையினரை, வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கண்ணிவெடியில் சிக்கி கவசவாகனம் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 13

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் புல்மோட்டை படை முகாமிலிருந்து 10 ஆம் கட்டைக்குச் சென்ற இராணுவத்தினர்மீது ஆட்டுமாபாவம் என்ற இடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் கவசவாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததுடன், பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## லித்துவேனியா நேற்று தனிநாடாக பிரகடனம்

### தன்னிச்சையாக நடவடிக்கை

மாஸ்கோ, பெப். 13

சோவியத் யூனியனில் உள்ள லித்துவேனிய மாநிலம் நேற்று தன்னிச்சையாக சுதந்திர ஜனநாயகக் குடியரசாக தன்னைப் பிரகடனம் செய்தது.

இது தொடர்பாக மாநில அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தம், லித்துவேனிய நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

சுதந்திர நாடாக லித்துவேனியாவை அங்கீகரிக்கும்படியும் லித்துவேனிய நாடாளுமன்றம் உலக நாடுகளைக் கேட்டுக்கொண்டது.

இம் மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், லித்துவேனியா தனிநாடாக மாறுவதற்கு ஆதரவாக 90 4 சதவீத வாக்காளர்கள் வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## ஈழத் தமிழர் குறித்து மத்திய அரசுபுத்திமதியா?

### கருணாநிதி கேட்கிறார்

சென்னை, பெப். 13

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் குறித்து தமிழக மக்கள் கவலைப்படக்கூடாது என்று கூற மத்திய அரசுக்கு உரிமை கிடையாது.

இப்படி முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நேற்று சென்னையில் செய்தியாளரிடம் சொன்னார்.

மத்திய அரசு பொய்யான தகவல்களைப் பரப்புவதற்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி சாதனங்களைப் பயன்படுத்தி வருவதாகவும் திரு. கருணாநிதி சொன்னார்.

## மிதி வெடியை மிதித்து விளையாடிய சிறுவர்

### ஒருவர் கால் இழந்தார்

கிளிநொச்சி, பெப். 13

வாய்க்கால் தண்ணீரில் மிதந்து வந்த மிதிவெடியை எடுத்து, விளையாடி, காலில் போட்டு அழுத்தியபோது அது வெடித்தது. அதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சகோதரங்கள் படுகாயம் அடைந்தனர்.

பூநகரி சுட்டதீவு பிள்ளையார் கோயில் பகுதியில் சேரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நொச்சிமோட்டை மோதலில் 10 படையினர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 13

வவுனியா நொச்சிமோட்டைக்கும் புதுக்குளத்திற்கும் இடையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் நண்பகல் 11 மணியளவில் முன்னேற முயன்றபோது அவர்களை வழிமறித்து விடுதலைப் புலிகள் தாக்கினர்.

மாலை 5 மணி வரை நடைபெற்ற பலத்த சண்டையில் பத்து இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்றும்—

அவர்களிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரி 81 ரக துப்பாக்கி - 3 அதற்குரிய மகஸின்-4, ரி 56 2 ரக துப்பாக்கி - 1, அதற்குரிய மகஸின் - 4, ரவைகள் - 200, ரி 56 - 1 ரகத் துப்பாக்கி - 1 ஆகியனவே புலிகளால் மீட்கப்பட்டன.

இந்தத் தாக்குதலில் புலிகள் தரப்பில் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வடமராட்சி நோக்கி ஷெல்!

யாழ்ப்பாணம், பெப். 13

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று வடமராட்சிப் பகுதி நோக்கி ஷெல் குண்டுகள் ஏவி விடப்பட்டன.

இடைக்காடு பகுதியில் விழுந்ததாகக் கூறப்படும் ஷெல்லுக்கு, ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 13

வெளியூர் தபால்கள் அடங்கிய 178 பொதிகள் 'குமண' கப்பலில் வந்துள்ளன.

அவை இன்று பருத்தித்துறையிலிருந்து இங்கு எடுத்துவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-5)

## முச்சந்தி முரளி



## தாண்டிக்குளத்திற்கு திரும்பியது ராணுவம்

வவுனியா புதுக்குளத்திற்கும் நொச்சிமோட்டைக்கும் இடையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பின்வாங்கி தாண்டிக்குளத்திற்குச் சென்றுவிட்டனர்.

வவுனியா நகரிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் கடந்த ஞாயிற்றும் திங்களன்றும் நொச்சிமோட்டைக்கு அண்மையில் நிலைகொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதலை அடுத்து திங்கள் மாலையில் சாஸ்திரிகூழாங்குளம், பறக்காரம்பனை ஆகிய பகுதிகள் ஊடாக இந்த இராணுவ அணி தாண்டிக்குளம் பகுதிக்கு பின்வாங்கியது. (உ)

## ஓமந்தை குண்டுவீச்சில் கட்டடங்கள் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 13

ஓமந்தைப் பகுதியில் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இடம்பெற்ற பொம்மர், ஹெலித் தாக்குதல்களில் பலர் படுகாயமடைந்தனர்.

திங்களன்று இடம்பெற்ற வான்த் தாக்குதலில் ஓமந்தை உபதபால் நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை, பேக்கரி, சைக்கிள் திருத்தும் கடை, கிராம சபை, பொது நூல் நிலையம் என்பன சேதமடைந்தன.

அப்பகுதியில் — வீதியால் சென்ற — இனந்தெரியாத நபர் ஒருவர் அந்த இடத்தி

[4ஆம் பக்கம் பார்க்க]

## வீதியோரங்களில் கிடக்கும் சடலங்கள்

யாழ்ப்பாணம். பெப். 13

நேற்று முன்தினம் ஓமந்தைப் பகுதியில் நடந்த விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் உயிரிழந்த சிலரின் சடலங்கள் வீதியோரங்களில் கிடக்கக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வீச்சில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் ஒருவரின் தகவலின்படி-

நொச்சிமோட்டையில் இருந்து ஓமந்தை வரை ஆண்களும், பெண்களுமாக எட்டுக்கும் மேற்பட்டோரின் சடலங்கள் வீதியோரங்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தவக்காலத்திற்கேற்ற செபப் புத்தகங்கள் விற்பனைக்குண்டு "ஆவே மரியா" காணிக்கைமாதா கைத்தொழிலகம் 115, மூன்றாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். கிளை காவலூர். (15794)

Sports Model சைக்கிள், English Raleigh சைக்கிள், வீட்டுத் தளபாடங்கள், றேடியோ, கசற்றேடியோ, தையல்மெசின் என்பன விற்பனைக்குண்டு 504, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (15813)

## வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் கொப்பி, பேப்பர், இரும்பு சோமிந்தி... பித்தளை செம்பு போத்தல்வகைகள் வாங்கப்படும் விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கு முன்னேன் யாழ்ப்பாணம். (10711)

## தவறிவிட்டது

எனது மூக்குக்கண்ணாடி குறோசெற் வீதியில் உள்ள நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்திற்கும் 538, நாவலர் வீதியில் உள்ள எனது வீட்டிற்கும் இடையில் தவறிவிட்டது எடுத்தவர்கள் மேல் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (15824)

சபாபதி செல்வராசா 632402386V அடையாள அட்டை 6-2-91 இல் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் கே. கே. எஸ். வீதி, 17ஆம் கிளை சந்தி திற்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் நாதன் தொழிற்சாலை கே. கே எஸ் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (15825)

## தரன் ஸ்ருடியோ

நபர் சிக, கலர் - கறுப்பு-வெள்ளை பாஸ்போர்ட், அடையாள அட்டை, 12"X10" படங்கள், பிளாஸ்ரிக், விளம்பரபோட் மற்றும் ஒளிய வேலைகளுக்கு 24, யாழ். வீதி, (ரெட்னா வீதி) யாழ்ப்பாணம். (15710)

## TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும்! FUDO: 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5744)

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 810, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம், வியாழன் விடுமுறை. (15799)

# குமண வந்தது

யாழ்ப்பாணம், பெப். 13

6 ஆயிரத்து 200 தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் குமண கப்பல் திங்களன்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனே ஆரம்பமாகின. (உ-3)

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் 24-02-1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவ, மாணவிகள் அனைவரையும் இக் கூட்டத்திற்கு தவறாது வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சந்தாப்பணத்தை (வருடாந்த சந்தா 10/- ஆயுள் சந்தா 100/-) கூட்டத்திற்கு முன்னர் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

க. நாகலிங்கம், தலைவர்.

ஐ. வரதஇராசேஸ்வர முதலி, இணைச் செயலாளர்.

கொ. இ. க. கொக்குவில்

[15823]

# 6 ஆம் மாத கண்ணீர் அஞ்சலி

| ஜனனம்: | மரணம்: |
|---|---|
| 1941 | 1990 |
| — | — |
| 12 | 09 |
| — | — |
| 08 | 13 |



## அமரர் கந்தையா கோபாலபிள்ளை (J.P.)

(பிரபல வர்த்தகரும், கோபால் அன்சன்ஸ் உரிமையாளரும்)

போரினால் அழியவில்லை; நீ வாழ்ந்தது
போதுமென்று நாம் நினைக்கவில்லை
பேரோடு புகழ் சேர்த்து வைத்துவிட்டு
பேசாமல் நீ போனதேனோ!
பார் படைத்த பரமனின் தாள் சேர்ந்து
சீர்பெற்று ஆத்மா சாந்தியுற
கரம் கூப்பி தொழுகின்றோம்; தினமும்
கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

இவர் பிரிவால் ஆழ்ந்த கவலையில் தோய்ந்து வாடும்:

மனைவி, மககள், தாய்,

20/5, வைரவர் கோயில் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். [15779]

# 16 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் பாஷாண பூஜை சபிண்டீகரணமும்

அமரர்

## கதிர்ப்பிள்ளை ஐயர் ஆறுமுகசாமி ஐயர்

(ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதமகுருக்கள். ஸ்ரீ முருகன் அன்னதான சபைத் தலைவர்)



பூலோகம்:
16 - 11 - 1906

பூரணம்:
30 - 01 - 1991

அன்பாலுருகு மடியவரைக் கண்டருள் புரியும்
மின்பால விளங்கிய வேலவனே விளையாக் கொளித்து
உன்பால் வந்தடைந்தேன் -
உனக்கே பாமினியோங்கு தெய்வ
பேரன்பாளனே செல்வச் சந்நிதிதோற்றிய பூரணனே

பூரணை தை பூசம் அன்று பூரணம் அடைந்த உங்கள் பூ வாழ்க்கையை நெஞ்சில் நினைத்து முருகனை வணங்குவோம்.

அன்னாரின் மரணக்கிரியைகளின் போது நேரிலும் பின்பு தகவல் அறிந்து எம்முடன் இரங்கல் அனுதாபம் தெரிவித்தவர்கள் பலவித உதவிகளையும் முன்னின்று நடாத்திய சகலருக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் நாளை 14-02-1991 காலை 7.00மணிக்கு நடைபெற இருக்கும் மேற்படி கிரியைகளிலும் கலந்து பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

வேலுண்டு வினையில்லை, மயிலுண்டு பயமில்லை

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு. [15789]

# விக்னா டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

## O/L 1991 SAT & SUN CLASSES

(8-00 pm — 2-00 pm)

புதிய பிரிவு ஆரம்பம்: 23-02-91

[C/5750]

யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை

எரிபொருள் விநியோக

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின் வரும் அளவு எரிபொருள் கொள்வனவில் விநியோகிப்பதற்கு தகுதிவாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றன.

1. சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்.
2. எஸ் ஏ ஈ. 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்.
3. மண்ணெண்ணெய் வாராந்தம் 200 லீற்றர், அல்லது மொத்தம் 2000 லீற்றர்.
4. பெற்றோல் வாராந்தம் 90 லீற்றர்.

வாராந்தக் கூறுவிலைகள் 30-04-1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது. ஆனால் கூறுநர்கள் விரும்பினால் எந்தக்கால எல்லை வரை இந்தக் கூறுவிலைகள் ஏற்புடையன எனக் குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

கூறுவிலைகள் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000/- பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 21-02-91 காலை 10.00 மணிக்கு முன் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும். யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். [இ-5753]

# நன்றி நவிலல்

அருட் செல்வி

## அலோசியா றூஸ்லி



பிறப்பு: 18 - 06 - 1903

இறப்பு: 09 - 02 - 1991

திருச்சிலுவை கன்னியர் சபை முன்னைநாள் முதல்வரும், யாழ். பிரதம வைத்தியசாலையின் தாதிகள் பொறுப்பாளருமாக பணியாற்றிய அருட்செல்வி அலோசியா றூஸ்லி சுவிற்சலாந்தில் 09-02-1991 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் புனித பணிக்காகவும், இறந்த வாழ்வுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

தகவல்:

திருச்சிலுவை கன்னியர் சபை.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

## Rev. Mother Aloisia Roosli H.C.

BORN: 18 - 06 - 1903

DIED: 09 - 02 - 1991

Rev. Mother Aloisia Roosli the first Provincial of the Holy Cross Sisters of Menzingen in Sri Lanka and formerly of the Government Hospital, Jaffna passed away at Menzingen, Switzerland on 09-02-1991

(15822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 துப்பாக்கிகள் கேட்கிறார் எம். பீ.

பொலன்னறுவை மாவட்டத்தில் இனந்தெரியாதவர்கள் இரண்டு கிராமங்களில் நடத்திய தாக்குதல்களில் 4 சிங்களவர்களும் இரண்டு முஸ்லிம்களும் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது.

இதனை அடுத்து மாவட்ட எம். பீயும் துணை அமைச்சருமான எச் ஜி பி நெல்சன் தனது தொகுதியில் உள்ளவர்களுக்கு பகிர்ந்தளிக்க 200 துப்பாக்கிகளை வழங்கும்படி ராணுவத் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளார் என்றும் கொழும்பில் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். [ஓ-எ]

# பொருள்கள் வந்தவுடன் நிவாரணம் கிடைக்கும்

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு அவை இங்கு கொண்டு வரப்பட்ட பின்னரே ஐந்தாம் கட்ட உலர் உணவு நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்க முடியும்

இவ்வாறு ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ப.நோ.கூ. சங்கங்களின் கையிருப்பில் இப்போது போதிய உணவுப் பொருள்கள் இல்லை. பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போது தரித்துள்ள குமண கப்பலில் வந்துள்ள உணவுப் பொருள்களை ஏற்றிவர ப.நோ.கூ. சங்க லொறிகள் அங்கு சென்றுள்ளன.

பொருள்கள் வந்து சேர்ந்ததும்- செயலகத்தின் அளவு அனுமதி கிடைத்ததும்- விநியோகம் ஆரம்பமாகும் - என்று ப.நோ. கூ. சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஐந்தாம் கட்ட நிவாரண விநியோகத்தை நேற்று முதல் ஆரம்பிப்பது என்று செயலகத்தில் நடந்த கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## பரந்தனில் ஷெல்கள்

கிளிநொச்சி, பெப். 13

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பரந்தன் சந்திக்கு அண்மையில் விழ்ந்து வெடித்தன. (ஓ-76)

## சிப்பாய் பலி

கொழும்பு, பெப் 13

மட்டக்களப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார் என்றும் ஆறு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு குருநகர் பாங்சால் வீதியில் உள்ள கார்மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# கைதான ஐநூறு பேரில் 25 பேர் தடுத்து வைப்பு

நெச்சிமோட்டைக்கும் புதுக்குளத்திற்கும் இடையில் நிலைகொண்டிருந்த இராணுவம் கடந்து ஞாயிறன்று அப்பகுதியிலிருந்த சுமார் ஐநூறு பொதுமக்களைக் கைது செய்ததாகவும்-

அவர்களில் 25 பேர் வரை வவுனியா இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்-

ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## இஸ்ரவேலும் தாக்கும்?

ஈராக மீது பதில் தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்று அமெரிக்காவுக்கு உறுதியளிக்க இஸ்ரவேல் மீண்டும் மறுத்துவிட்டது.

வாஷிங்டனில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்த பின்னர் இஸ்ரவேலிய பாதுகாப்பு அமைச்சர் மோஷே ஆரன் இத்தகவலை நேற்றுச் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

கடந்த திங்கள் ஈராக் இரண்டு ஸ்கட் ஏவுகணைகளை இஸ்ரவேல் மீது ஏவியதாக வெளிவந்த செய்திகளின் பின்னர் இத்தகவல் வெளியிடப்பட்டது.

# கண்ணிகள் வெடிப்பதற்கு 'பாரசூட்' மூலம் குண்டு வீச்சு

சவூதி அரேபியாவுடனான குவைத் எல்லை நெடுக ஈராக்கிய படைகள் புதைத்து வைத்துள்ள பல்லாயிரக்கணக்கான நிலக்கண்ணிகளை வெடிக்க வைக்க பிரமாண்டமான குண்டுகளை பன்னாட்டுப் போர் விமானங்கள் 'பாரசூட்' மூலம் அப்பகுதியில் போட ஆரம்பித்திருப்பதாக ஆஸ்திரேலிய வானொலி நேற்று அறிவித்தது.

பி. எல். டபிள்யு-2 என்றழைக்கப்படும் இக் குண்டுகள் ஒவ்வொன்றிலும் 15 ஆயிரம் தொன் வெடி மருந்து சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கீழே விழுந்தவுடன் இக்குண்டுகள் வெடிப்பதனால் ஏற்படும் அதிர்வு காரணமாக நிலத்தில் விதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் சங்கிலித் தொடராக வெடிக்கும் என்றும் பன்னாட்டுப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

தரையுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இக் குண்டுகளைப்போடும் வேலை ஆரம்பித்திருப்பதாக ஆஸ்திரேலிய வானொலி மேலும் அறிவித்தது.

## முல்லைத்தீவில் மும்முனை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து கடும் சண்டை நடந்துவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானங்கள் மாறி, மாறி குண்டுகளை வீசி வருவதாகவும், கடலில் இருந்து கடும் பீரங்கி தாக்குதல்கள் நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர். [ஓ-15]

## மிதிவெடி...

நேற்றுப்பகல் நடந்த இந்தச் சம்பவத்தில் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த ம.பிரபாகரன் [வயது 8], ம. சிவதர்ஷினி [வயது 12], ம.வனஜா [வயது 3] ஆகியோரே காயமடைந்தனர்.

இவர்களில் மிதிவெடியை காலினால் அழுத்தியவரான பிரபாகரன் தனது வலது காலை இழந்து விட்டார். (ஓ-76-15)

## வடக்கிற்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குவதற்கு மாங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்த வேலைகள் குறித்து மதிப்பீடு செய்த இந்த அதிகாரிகள், திருத்த வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருள்களை கொழும்பில் பெற்றுக்கொள்ள முயற்சி எடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மின்சார சபையுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து தேவையான பொருள்களை வழங்க சபை இணங்கியதாகவும் —

அந்தப் பொருள்களை எடுத்துவர கூட்டுப் படைத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டபோது அதற்கு அனுமதி அடியோடு மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கொழும்புக்குச் சென்ற அதிகாரிகள் — முயற்சி பலனளிக்காத நிலையில் — யாழ். திரும்பி விட்டனர் என்றும் தெரிய வந்தது. [illegible]

## வீதியோ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றன என்று தெரியவருகிறது.

அப்பகுதிகளில் நடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது பலர் காயமடைந்தனர் என்று அவர் கூறுகிறார்.

இவ்வேளை, மாணிக்க வளவு என்ற இடத்தில் ஒரு சடலமும், பரநாட்டான்கல்லில் இரு சடலங்களும் காணப்பட்டன.

உயிரிழந்தவர்களில் அனேகர் பல இடங்களிலும் இருந்து சென்றவர்கள் என்றதால் எளிதில் அடையாளம் காண முடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஓ-15)

## ஓமந்தை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லேயே உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் பேக்கரி உரிமையாளரான சின்னத்துரை (வயது 58 ஓமந்தை), வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (வயது 74 — நெல்வேலிக்குளம்), ஜெயபாலன், சின்னையா ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளார்.

இதனிடையில் —

கடந்த ஞாயிறன்று சொர்க்காரன்குளத்தில் இடம் பெற்ற ஆட்டிலறி ஷெல் தாக்[illegible]

## விமானிக்கு மரண தண்டனை

இஸ்ரவேலுக்கு உளவு பார்த்த குற்றத்துக்காக இரண்டு ஜோர்தானியர்கள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை நேற்று அம்மானில் உள்ள சிறையில் நிறைவேற்றப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அவர்களில் ஒருவர் ஜோர்தானிய விமானப் படையில் விமானியாகப் பணிபுரிந்த லெப்டினன்ட் அலி அக்பர் ஹபீஸ் என்றும் மற்றவர் சிவிலியனான அஹமது முகமது அஹ்மத் என்றும் அடையாளம் காணப்பட்டனர்.

தூக்கிலிடப்பட்ட லெப்டினன்ட் ஹபீஸ் அமெரிக்காவில் பயிற்சி பெற்று வந்தபோது அங்கு இஸ்ரவேலிய மொசாட் உளவுப் படை ஏஜண்டாகப் பணிபுரிந்த பெண் ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், அந்தப் பெண் அத் தொடர்பைப் பயன்படுத்தி ஜோர்தானிய விமானப்படை பற்றிய தகவல்களைச் சேகரித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.


# முக்கிய அறிவித்தல்

01 - 01 - 1991 முதல் எமது ஆர். வீ.ஜி. பீடிகள் வழமைபோல் பல வர்ண லேபலில் விற்பனை செய்யப்படுகின்றன.

எமது அசல் ஆர். வி. ஜி. பீடிகள் வெள்ளை லேபல்களில் விற்பனையாவதில்லை என்பதை ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

- ஆர். வி. ஜி. நிர்வாகம்

[15805]



யாழ். பல்கலைக்கழக லிகிதர் பதவி போட்டிப் பரீட்சைக்கான

# விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: நுண்ணறிவு (I. Q.)

★ தொடர்ச்சியாக 10 தினங்கள்.
★ நாளாந்தம் 2 மணித்தியாலங்கள்.
★ இலவச பாடக் குறிப்புகள்.
★ 1 மணித்தியாலத்திற்கான - கட்டணம் ரூபா 10/- மட்டுமே

ஆரம்பம்: 16 - 02 - 91 முற்பகல் 9 மணி

● வகுப்புகள் யாவும் எமது கிளை நிறுவனத்தில் நடைபெறும்.

கிளை: Astan English Achamedy, 125, அரசடி வீதி, கந்தர்மடம்.

விவரங்களுக்கு: நேரில் பிற்பகல் 2.00 — 5 30 வரை

## ASTAN INSTITUTE (Branch)

125, Arasady Road, Kantharmadam.

(கந்தர்மடம் சந்திக்கண்மையில்) [கி-5741]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிசிலியா இராசையா (சேளி)

சிசிலியா இராசையா (சேளி) இளைப்பாறிய ஆசிரியை 12-02-1991 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிலிப்பையா இராசையாவின் அன்பு மனைவியும், பி. பிரான்சிஸ் (பாதுகாப்பு உத்தியோகஸ்தர் - Care International), பி. சூசைதாஸ் (ஆசிரியர், சென். ஹென்றிஸ், இளவாலை), பி. அல்பிரட் மரியதாஸ் (கணக்காளர், லண்டன்), எஸ். மேரி மாகிறற் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பி. யோசேப்பின் (இளைப்பாறிய ஆசிரியை), எஸ். பேர்ணாடெற் (ஆசிரியை, றோ. க. பாடசாலை, சில்லாலை), எம். மனோகரி (லண்டன்), றெஜி அப்புறோஸ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13-02-1991 புதன்கிழமை காலை 8-30 மணிக்கு இல. 16, மடம் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து புனித அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
பி. பிரான்சிஸ்

[15438]

## திரு சுப்பிரமணியம் வரதராஜா

(பிறைட் சோப் உரிமையாளர், மல்லாகம்)

தொல்புரத்தை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரதராஜா லண்டனில் கடந்த 9 ஆம் திகதி காலமானார்.

இவர் மாலினியின் (மாலா) அன்புக் கணவரும், கௌசலி அபிரா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மங்கையற்கரசி அருணாசலத்தின் அன்பு மருமகனுமாவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பாலகிருஷ்ணன்
(சிங்கர் கம்பனி)

நெடுங்கேணி
கணேஸ்வரம்,
அளவெட்டி.

[15439]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ் பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org